

# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## "மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபத்திருக்கிறது . . . "

மத்தேயு 4:17

செய்தி மலர்
2022
டிசம்பர்

இதழ் : 08
மலர் : 19



# சபை ஊழியரின் அன்புமடல்



கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் சபையார் யாவருக்கும் வாழ்த்துதலை இந்த செய்தி மலர் வழியாக தெரிவித்துக்கொள்கிறேன். நாம் இந்த வருடத்தின் கடைசி மாதத்தில் வந்துள்ளோம். கடந்த மாதங்களை நாட்களை எண்ணி பார்த்தால் தேவன் செய்த நன்மைகளுக்காக தேவனை துதிக்கிறேன்.

“பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள் விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள் மூப்பரையும் தேசத்தின் எல்லாக் குடிகளையும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச்செய்து கர்த்தரை நோக்கி கூப்பிடுங்கள்”(யோவே-1:14) “ஜனத்தைக்கூட்டுங்கள், சபையை பரிசுத்தப்படுத்துங்கள், முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள” என்றும் யோவே-2:16-ல் வாசிக்கிறோம்.

ஆனால் நாம் சபைக்கு வரும்போது சிறியோர் முதல் முதியோர் வரை அனைவரையும் சபைக்கு அழைத்து வரவேண்டும். நம்முடைய சபையில் இப்படிதான் குடும்பமாக பிள்ளைகள் குழந்தைகள் அனைவரையும் அழைத்து வந்து தேவனை தொழுதுகொண்டு தேவனை துதிக்கிறோம். நாம் சபையில் ஏன் வரவேண்டும் என்று ஒரு கேள்வியை எழுப்பிபாருங்கள்.

முதலாவது, நாம் சபைக்கு வரும்போது மனந்திரும்பும்படியாக என்னிடத்தில் என்ன குறை உண்டு என்று எண்ணி பார்த்துக்கொள்ள வேண்டும். தேவன் சபையில் ஏதாவது ஒரு பகுதியில் உங்கள் மனதை தொடும்போது குறைகளை ஒத்துக்கொண்டு மனந்திரும்பவேண்டும்.

**“மனந்திரும்புங்கள் பரலோகராஜ்ஜியம் சமீபத்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்”(மத்-4:17)**

இரண்டாவது, நாம் மனந்திரும்புவதற்கு பாவங்களை அறிக்கை செய்யவேண்டும். "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிற எவனோ இரக்கம் பெறுவான்" (நீதி-28:13)

மூன்றாவது, நாம் தேவன் மீது அன்பு செலுத்துகிறவர்களாய் இருக்க வேண்டும். அதற்கு நாம் தேவ அன்பை எப்படி பெற்றுக்கொள்ள முடியும், "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா-3:16)

இந்த அன்பை உணர்ந்தவர்களாக இருந்தால் அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். நாம் என்னதான் செய்தாலும் அன்பு இல்லாவிட்டால் எல்லாம் மாயையாக மாறிவிடும். அதனால்தான் இயேசு பேதுருவிடம் மூன்று முறையும் என்னிடத்தில் அன்பாய் இருக்கிறாயா? என்றும் என்னை நேசிக்கிறாயா? என்று கேட்டார். தேவனிடம் அன்பாய் இருக்கிறேன் என்று சொல்லுகிற எவனும் சகல மனிதனிடம் அன்பு உள்ளவர்களாக இருக்க வேண்டும் இல்லை என்றால் பொய்யராகத்தான் நாம் வாழ்கிறோம்.

பிதாவானவர் இயேசுவை பார்த்து "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்கு செவி கொடுங்கள்" என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று (மத்-17:5) இயேசுவுக்கும் பிதாவுக்கும் உள்ள அன்பின் ஆழத்தை அறிந்துகொள்ள நாம் என்ன செய்கிறோம். இந்த அன்பின் ஆழத்தை நாம் வாழ் நாட்கள் முழுவதும் ஆராய்ந்து பார்த்தாலும் அறிய முடியாது காரணம் எல்லையில்லா அன்பு அதில் உள்ளது. இயேசுவானவர் பிதாவின் மீதுள்ள அன்பின் நிமித்தமே உலகத்தை நேசித்தார். அதாவது எல்லாவற்றையும் செய்து நமக்காக செய்து முடித்தார். "சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்துள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்கு பிரியமாயிற்று. முன்னே அந்நியராவும்

துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார். ஸ்திரமாயும் உறுதியும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். (கொலே–1:19–22)

அதனால்தான் இயேசுவானவர் சொன்னார் "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம். நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கபட்டவர்களாகும்படி அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன். நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.
(யோவா–17:17–23)

சபை ஊழியர்,
**சகோ. ஜெயசேகர்.**

## தேவ செய்தி

### கர்த்தத்துவம் உந்தன் தோளின் மேலே

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, உலக இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சபையோர் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பை குறித்து ஏசாயா தீர்க்கதரிசி குறிப்பிட்ட ஒரு வார்த்தை "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்

நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் கர்த்தத்துவம் (புழளநசஅநவெ) அவர் தோளின் மேல் இருக்கும்" என்பதாகும். (ஏசாயா–9:6)

கர்த்தத்துவம் என்றால் அரசாங்கம், இராஜாங்கம், சர்வவல்லமை, அதிகாரம், ஆளுமை, வரங்கள் ஆகிய பொருள்களை குறிக்கிறது. ஆம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் பிறந்தபொழுது " அவள் ஒரு குமாரனை பெறுவாள் அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக.ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்ற வார்த்தை தூதர்களால் சொல்லப்பட்டது. (மத்–1:21) ஆமென். "அப்பொழுது கர்த்தர் பூமி மீதெங்கும் இராஜாவாய் இருப்பார் அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார். அவருடைய நாமம் ஒன்றாயிருக்கும்." என்று சகரியா தீர்க்கதரிசி கூறினார். (சகரி–14:9) ஆம் நம் இயேசு இராஜாதி இராஜா கர்த்தாதி கர்த்தர் சர்வ வல்லமையுள்ளவர். ஆகவே மனங்கலங்காதிருங்கள். அவருடைய இராஜாங்கம் எப்படிபட்டது என்று கீழ்வரும் பகுதிகளில் பார்க்கலாம்.

## 1.இரத்தக்கிரயத்தால் கட்டப்பட்ட கர்த்தத்துவம்

இயேசு என்ற பெயரில் கர்த்தர் பூமிக்கு வந்தது மனுக்குலத்தின் பாவங்களுக்காக இரத்தம் சிந்தி பலி ஆடாக மரித்து மூன்றாம் நாளில் உயிரோடு ஜெயம் பெற்று எழுந்திடவே. நம்முடைய பாவங்களை கழுவி சுத்திகரிக்கும் ஆற்றல் இயேசுவின் இரத்தத்திற்கு மட்டுமே உண்டு. ஆகவே விசுவாசத்தினாலே இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் மகிமையாய் இந்த கர்த்தத்துவத்துக்குள் பிரவேசிக்கிறார்கள். அவர்களை பிசாசு தொடமுடியாது. அவர்கள் நித்தியஜீவனுக்கும், இளைப்பாறுதலுக்கும் சொந்தக்காரர்கள். தானியேல் தீர்க்கதரிசி சொல்கிறார் "அந்த 62 வாரங்களுக்கு பிறகு மேசியா சங்கரிக்கப்படுவார் ஆனாலும் தமக்காக அல்ல" (தானி–9:26) என்று.

பவுல் அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார் "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருக்கிறதென்றும் நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல என்றும் அறியீர்களா? கிரயத்துக்கு கொள்ளப்பட்டீர்களே ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய

உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1-கொரி-6:19,20)என்று.

பிரியமானவர்களே, இயேசுவின் கர்த்தத்துவின் கீழ் வந்து மீட்படையாமல் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரித்துக்கொள்ள முடியாது. வேதம் தெளிவாக கூறுகிறது

"அநியாயக்காரர் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரித்ததில்லை என்று றியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள். வேசி மார்க்கத்தாரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபச்சாரக்காரரும், சுய புணர்ச்சிக்காரரும், ஆண் புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசீனரும், கொள்ளைக்காரரும், தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாய் இருந்தீர்கள். ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள் பரிசுத்தமாக்கப்பட்டீர்கள் நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" (1-கொரி-6:9-11)என்று. அல்லேலூயா.

## 2. தாழ்மையினால் கட்டப்பட்ட கர்த்தத்துவம்

ஆத்தும இரட்சிப்பை மனுக்குலத்திற்கு கொடுக்கும்படியாய் தேவாதி தேவன் தன்னைத் தாழ்த்தி மனிதனாக அவதரித்தார். நம் ஆண்டவர் எவ்வளவு தாழ்மையுள்ளவர். நம்மை பார்த்து சிநேகிதனே என்று அன்பாக அழைக்கிறார். இந்த கிறிஸ்மஸ் காலங்களிலே நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தை இயேசுவுக்கு காணிக்கையாக அர்ப்பணிப்போமாக.

"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார். அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால்கள் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தர் என்று

நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்" (பிலி–2:5–11)ஆமென்.

ஆகவே இயேசுவைப் போலவே நாமும் மனத்தாழ்மையுள்ளவர்களாய் நடந்துகொண்டால் இயேசுவின் கர்த்தத்துவத்திற்கு சொந்தக்காரர்களாய் மாறுவோம். இயேசு சீஷர்களின் கால்களை கழுவி இதை வெளிப்படுத்தினார். உலக மனிதர்களைப் போல இறுமாப்புள்ளவர்களாய் ஆளாமல் மற்றவர்களுக்கு சேவை செய்து மற்றவர்களுக்காக ஜெபித்து இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை இந்த உலகத்தில் நிறைவேற்ற வேண்டும். "சீயோன் குமாரத்தியே மிகவும் களிகூறு எருசலேம் குமாரத்தியே கெம்பீரி. இதோ உன் இராஜா உன்னிடத்தில் வருகிறார். அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கவரும் தாழ்மையுள்ளவரும் கழுதையின் மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறி வருகிறவருமாய் இருக்கிறார்" (சகரி–9:9) அல்லேலூயா.

## 3.முடிவில்லா கர்த்தத்துவம்

இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு மனத்தாழ்மை தரித்துக்கொண்டு இந்த உலகத்தில் ஊழியம் செய்கிறவர்களுக்கு ஒரு நாளும் அழிவில்லை. "ஒருவன் என் வார்த்தையை கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் மரணத்தை காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன். ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன். உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான் கண்டு களிகூர்ந்தான்" என்றார். (யோவா–8:51–58)

ஆகவே ஒருநாளும் ஆண்டவருடைய கர்த்தத்துவத்தை யாரும் அழித்து விட முடியாது அது பெருகிக்கொண்டேயிருக்கும். உலகத்தின் கடை நிலை மனிதன் சுவிசேஷத்தை கேட்டு இரட்சிப்படைகிறவரைக்கும் ஆண்டவருடைய வருகை தள்ளிப்போடப்படும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் பரிசுத்தம், தியாகம், அர்ப்பணிப்பு இதை நிச்சயம் செய்தே தீரும்.

"தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய இராஜ்ஜியத்தையும் அவர் திடப்படுத்தி அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும், நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கம் அதன் சமாதானத்துக்கும்

முடிவில்லை. சேனைகளின கர்த்தருடைய வைராக்கியம் இதை செய்யும்" என்று ஏசாயா தீர்க்கதரிசனமாக சொல்லியிருக்கிறார். (ஏசாய-9:7)

இந்த அன்பின் கர்த்தத்துவத்திற்குள் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் குழந்தைகளைப் போல மறுபிறப்பு அடைந்து இரட்சிப்பின் அனுபவத்தை பெற்றுக்கொண்டு தேவனுடைய வல்லமையோடும், அதிகாரங்களோடும் பிறனுக்காக வாழ்வார்கள்.
ஓனாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும். சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும், புழுதி சர்ப்பத்திற்கு இரையாகும். என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்கு செய்வதுமில்லை கேடுண்டாக்குவதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா-65:25)இதுதான் இரட்சிப்பின் அனுபவம்.

ஆனால் பிசாசினுடைய இராஜ்ஜியமோ அது அழிக்கப்படும். வலுசர்ப்பமும் அந்திகிறிஸ்துவும், கள்ளதீர்க்கதரிசிகளும், மிருகமும் அக்கினிக்கடலிலே தூக்கி எறியப்பட்டு அழிக்கப்படுவார்கள். (வெளி-20:10)

பிரியமானவர்களே, இந்த கிறிஸ்மஸ் நன்னாளிலே நாம் எந்த கர்த்தத்துவத்தை சேர்ந்தவர்களாக இருக்கிறோம் என்பதை சிந்தித்து பார்ப்போம். இயேசுவின் கர்த்தத்துவமா? அல்லது பிசாசின் கர்த்தத்துவமா? இயேசுவின் கர்த்தத்துவம் பரிசுத்தமுள்ளது, வல்லமையுள்ளது மேலும் நித்தியமானது. ஆனால் பிசாசின் கர்த்தத்துவமோ? அசுத்தமும், இச்சையும், இருளும், தோல்வியும் அழியக்கூடியதுமானது. ஆகவே கிறிஸ்துவின் கர்த்தத்துவத்திற்கு நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை காணிக்கையாக அர்ப்பணிப்போம்.

"இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக்கண்டார்கள். மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது. அந்த ஜாதியை திரளாக்கி அதற்கு மகிழ்ச்சியை பெருகப்பண்ணினீர்... அவர்கள் சுமந்த நுகத்தடியையும், அவர்கள் தோளின் மேலிருந்த மிலாற்றையும், அவர்கள் ஆளோட்டியின் கோலையும் முறித்துப்போட்டீர்." (ஏசா-9:2-4)அல்லேலூயா.

கிறிஸ்துவின் பணியில்
அன்பு சகோதரன்
S.ஸ்டாலின்

# சீகன்பால்க்

டென்மார்க் மன்னன் நான்காம் பிரடரிக் (Frederick IV) தேவனுடைய ஊழியத்தை இந்தியாவில் செய்ய ஊழியர்களை அனுப்ப விரும்பினார். டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவர்கள் செல்ல விரும்பவில்லை.
ஜெர்மனி நாட்டை சேர்ந்த பர்தலோமியு சீகன்பால்க்க்கும், புளுச்சோவும் இந்தியா சென்று ஊழியம் செய்ய முன் வந்தனர்.

மருத்துவமனைகளோ, டாக்டர்களோ, மருந்தோ இல்லாத நாடு இந்தியா என்ற நிலை அன்று இருந்தபடியால் ஐரோப்பியர் இந்தியா வர தயங்கிக் கொண்டிருந்த நாட்கள் அது. சீகன்பால்க்கும், புளுச்சோவும் 1706ம் ஆண்டு ஜுலை மாதம் 9ம் தேதி தரங்கம்பாடியில் வந்து இறங்கினர். இவர்கள்தான் முதலாவது சீர்திருத்த திருச்சபையஜன் ஊழியர்கள்.

தரங்கம்பாடி டென்மார்க் அரசனின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. இரண்டு ஊழியர்களையும் டென்மார்க் அரசர்தான் அனுப்பிருந்தார். தரங்கம்பாடிக்கு கப்பலில் வந்த அவர்களை கரைக்குக் கொண்டு வர படகுகள் அனுப்பப்படவில்லை. சில நாட்கள் கப்பலிலேயே தங்க வைக்கப்பட்டனர்.

அவர்களை அழைத்து வரச் சென்ற அதிகாரி அவர்களை தரங்கம்பாடியின் வீதிகளிலே விட்டு விட்டுச் சென்று விட்டார்.
இழிவான வரவேற்பை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர். சீகன்பால்க்க்கும் அவருடைய நண்பரும் போர்ச்சுகீசிய மொழியையும், தமிழ் மொழியையும் கற்கத் தொடங்கினர். இந்தியக் குடும்பங்களை சந்திக்கக் கூடாது என்று தளபதி கட்டளையிட்டான்.

தளபதி மிஷனரிகளைக் கண்டு பயந்தான். தன்னைக்குறித்து டென்மார்க் அரசனுக்கு கடிதம் எழுதி விடுவார்கள் என்று நினைத்தான். ஆனால் ஊழியர்களோ இந்தியர்களை கிறிஸ்துவுக்காக ஆதாயப் படுத்தவே விரும்பினர். தளபதியோ சீகன்பாலையும், புளுசோவையும் சிறையிலிட்டான். சிறையில் அவர்களை மிகவும் கொடுமைப் படுத்தினான். எல்லா உபத்திரவங்களையும் பொறுமையோடு சகித்தனர்.

(தொடர்ச்சி 14 ஆம் பக்கத்தில் . . .)

# ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்..

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோதரி . அனுஷா டினோ
செல்வி. நயோமி ராமர்
சகோதரி. விஜயா அந்தோனி சாமி
செல்வன். ஜோயல் ஜஸ்டின்
சகோதரி. ஷீபா ராணி வெங்கடேஷ்
சகோதரி. சசிகலா ராமர்
சகோ. பால் ராஜேஷ்
சகோதரி. கிளாடிஸ் பாப்பி சிவகுமார்
சகோதரி. சசிரேகா சதீஸ்குமார்
செல்வன். திரில் காட்சன்
செல்வன். ஜெர்ஸலின் நியா ஜோன்ஸ்
சகோதரி. ஜீனா சதீஸ்குமார்
சகோதரி. சிவ குமாரி ஜஸ்டின்
செல்வன். ஜான்சன் ராஜவேல்
செல்வி. சாயா ஸ்டாலின் சுனில் வின்ஸ்
சகோ. சிவகுமார்
செல்வன். பென்ஜமின் ராமர்
சகோ. விபின்
சகோ. ஆல்வின் முத்தையா
சகோதரி. ஜெனிஃபா ஜோஸ்வா
சகோ. பால் ராஜசேகரன் P
சகோ. எட்வின் சாம் ஞானதுரை
செல்வன். ராக்கின் ஹெரீஷ்
செல்வி. கிரேஸ்லின் சாம் ஞானதுரை
சகோதரி. ஜாஸ்மின் மெர்ஸி பென்சாம்
செல்வி. கவிதா கொம்மையன்
சகோதரி. ஃபாபியா ராஜேஷ்
செல்வி. ஸ்டீனா ஸ்டாலின் சுனில் வின்ஸ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்
(ஆதி .22:18)

திருமதி / திரு. தாஸ்
திருமதி / திரு. கிறிஸ்டோபர்
திருமதி / திரு. வேலு ராமர்
திருமதி /திரு. ஸ்டீபன். T
திருமதி / திரு. பிரசாத் சுந்தரம்
திருமதி / திரு. ஜாண்சன்
திருமதி / திரு. ஆல்வின்
திருமதி / திரு. பிபின் ரிச்சர்ட்
திருமதி / திரு. ஜெபசிங்
திருமதி / திரு. பென்சாம்
திருமதி / திரு. பால் அறிவுச்சுடர்

**. . . நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன் ...**
( சகரியா 2:10)

# 2022 டிசம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/12/2022 | சகோ.சுகுமார் | சகோ.ஸ்டாலின் |
| 11/12/2022 | சகோ.தாமஸ் | சகோ.பிரசாத் |
| 18/12/2022 | சகோ.ஆன்டனி | சகோ.ஆரோக்கிய ராஜ் |
| 25/12/2022 | கிறிஸ்துமஸ் தின ஆராதனை | |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/12/2022 | சகோ.வில்சன் | சகோ.கிறிஸ்டோபர் |
| 09/12/2022 | ATC - CAROLS | |
| 16/12/2022 | ICC CAROLS CELEBRATION | |
| 23/12/2022 | சபையின் குடும்ப பாடல் ஆராதனை | |
| 30/12/2022 | சகோ.சுகுமார் | சகோ.ஜெகநாதன் |

25/12/2022 அன்று **கிறிஸ்துமஸ் ஆராதனை**
இடம் – அஹமதி தமிழ் திருச்சபை
நேரம் பின்னர் அறிவிக்கப்படும்

31/12/2022 அன்று **விழிப்பு இரவு ஆராதனை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

01/01/2023 அன்று **புது வருட ஆராதனை**
இடம் – அஹமதி தமிழ் திருச்சபை
நேரம் பின்னர் அறிவிக்கப்படும்

# 2022 டிசம்பர் மாதத்திற்கான வேத வினா!

## கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்



1.ஞானத்தை யாரிடம் கற்றுக் கொள்ளவேண்டும்?

2.கனமடைபவன் யார்?

3.பரிதானம் வாங்கியவர்களின் பார்வையில் எது இரத்தினம் போல் இருக்கும்?

4.கர்த்தரின் கையில் நீர் கால்கள் எது?

5.யாருக்கு யார் அருவருப்பானவர்கள்?

6.எதை மிதமிஞ்சி சாப்பிட கூடாது?

7.வழியை தாறுமாறாக்குவது எது?

8.அகந்தை வந்தால் வரும் பின்விளைவு என்ன?

9. யாருக்கு சந்தோஷம் கிடைக்கும்?

10.நீதி 8:22-31 வரையில் சொல்லப்படும் நபர் யார்?

11.ஆபத்துக்கு பயப்படாதிருப்பவன் யார்?

12.ஜீவ ஊற்று எங்கிருந்து புறப்படும்?

13.ஒருவருக்கு அரணாயிருப்பது இன்னொருவருக்கு கலக்கமாய் இருக்கும்,அது என்ன?

14.நம்பிக்கையோடிருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

15.சீட்டு போட்டால் கிடைக்கும் இது?

**விடைகளை வருகின்ற 20-12-2022க்குள் (WhatsApp #65040638) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் நீதிமொழிகள் 1-29 ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்.**

- - -தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; -மத்தேயு 7:7

## 2022 –அக்டோபர் மாத வேத வினாவுக்கு விடை

1.சிறுமையானவனின் வழக்கு, எளியவர்களின் நியாயம் (சங் 140:12)
2.வாலவயதின் குமாரர் (சங் 127:5)
3.எகிப்தியரின் நடுவிலிருந்து இஸ்ரவேலை புறப்பட பண்ணினது (சங் 136:11,12)
4.விதைக்கிறவர்கள், அறுப்பார்கள் (சங் 126:5)
5.பார்வோனுடைய சேனைகள் (சங் 136:15)
6.சங்கீதம் 132:11,12
7.நீதிமான் தயவாய் கடிந்துகொள்ளுதல் (சங் 141:5)
8.எனக்காக, யாவையும், முடிப்பார் (சங் 138:8)
9.கர்த்தருக்கு பயந்து அவருடைய கிருபைக்கு காத்திருக்கிறவர்கள் மேல் (சங் 147:11)
10.எருசலேம் (சங் 122:3)
11.பண்டசாலைகளிலிருந்து (சங் 135:7)
12.பலவானுடைய கூர்மையான அம்பும், சூரைச்செடிகளை எரிக்கும் தழலும் (சங் 120:4)
13.பிரியமானதைச், போதித்தருளும் (சங் 143:10)
14.சாந்தகுணமுள்ளவர்கள் (சங் 149:4)
15.நம்முடைய ஆத்துமா (சங் 124:7 )

## 2022– அக்டோபர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.சுகந்தி தம்பு குமார்
Sis.நகோமி ஜான்சன்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis.மெர்ஷிலின்தயா ஏசுரெத்தினம்
Sis.மரகதம் ஸ்டீபன்
Sis.சுபா ஸ்டீபன்
Sis.வனித்தா
Sis.ஜெஸ்லெட்

Sis.ஜீனா சதீஷ்
Sis.செலின் டேவிட்
Sis.அனிதா ஆரோக்கியதாஸ்
Bro.எபிநேசர்
Bro.பக்தராஜ்
Bro.ஜெகன்
Bro.ஜான்சன்
Bro.பால்ராஜ்

அரசு அதிகாரிகளின் வீடுகளில் பணிபுரிந்த இந்தியர்கள் மத்தியில் ஊழியம் செய்ய ஆரம்பித்தனர். தேவனின் கிருபையால் அநேகர் இயேசுகிறிஸ்துவைத் தம் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். பிள்ளைகளுக்கு விடுதிகள் ஆரம்பித்தனர். பள்ளிகளும் தொடங்கினர். சிறுபிள்ளைகள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.

டேனிஸ் மிஷன் அவர்கள் தரிசனத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. அவர்கள் ஊழியர்கள் பிரசங்கம் மட்டும் செய்ய விரும்பினர். விடுதிகளையும் பள்ளிகளையும் நடத்தக் கூடாது என்றனர்.
1706ம் ஆண்டு இந்தியா வந்த சீகன்பால்க் இரண்டே ஆண்டுகளில் 1708 அக்டோபர் மாதம் 17ம் தேதி ஜெபத்துடன் புதிய ஏற்பாட்டை மொழி பெயர்க்க ஆரம்பித்தார். தாம் மரிக்கும் முன் பழைய ஏற்பாட்டிலும் ரூத் முடிய மொழி பெயர்த்தார்.

அவரால் மனந்திரும்பிய ஒரு மனிதருடைய மகன் ஆரோன் என்பவர். இந்த ஆரோன்தான் இந்தியாவில் முதலாவதாக குருவாக அபிஷேகம் செய்யப்பட்ட இந்தியர். சீகன்பால்க் ஐயர்தான் முதன் முதலாக வந்த சீர்திருத்த சபையின் மிஷனரி. அவரால்தான் இந்தியர்களுக்கு முதலாவதாக இந்திய மொழியில் நம்முடைய தாய்மொழியாம் தமிழில் வேதாகமம் கொடுக்கப்பட்டது.

1706ம் ஆண்டு தம்முடைய 24 வயதில் இந்தியா வந்த சீகன்பால்க் 1719ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23ம் தேதி தம்முடைய 37 வயதில் இந்தியாவில் தரங்கம்பாடியில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவருடைய சரீரம் தரங்கம்பாடியில் அவர் கட்டிய 'எருசலேம்' ஆலயத்தில் பலி பீடத்தின் முன்பாக அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இளமையிலேயே சீகன்பால்க் மரித்துவிட்டார். ஆனால் அவர் விட்டுச் சென்ற பணி இன்னும் தொடர்கின்றது. தமிழ் வேதாகமத்தைப் பெற்றுக்கொண்ட தமிழர்கள் தேசமெங்கும் சென்று ஊழியம் செய்யப் புறப்பட்டு இருக்கின்றார்கள்.

உலகத்தை கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்து விட்டார்கள் என்று உங்களையும் சொல்ல ஊழியம் செய்யப் புறப்படுங்கள்.உபத்திரவம், மனவேதனை இவைகள்தான் ஊழியருக்கு அரசாங்கமும், மக்களும் கொடுத்த பரிசு. தேவனோடு அநேகரை ஒப்புரவாக்கும் ஊழியத்தில் உண்மையாய் நின்றவர் சீகன்பால்க்.

கர்த்தரின் ஊழியர்,
**சகோ. எபிநேகசர்**

# Kids Corner

## Christmas Carols

There are four penguins named Micky, Fred, Rob and Eve who are fond of singing Christmas carols before the people of the Icepack, where they live. All the people of Icepack enjoyed the carols of the penguins. One Christmas eve, Micky catches a terrible cold and starts sneezing. He tells his friends that they will have to sing without him that year as he is unwell. “No, that’s not possible,” says the other three friends. They also realize that the people of the Icepack would be terribly disappointed if they didn’t sing.

The penguins decide to approach Doctor Lolo and asks to heal Micky soon. The doctor thinks for a while and tells them that the only way to get Micky better was by using the golden seaweed which could be found in the Indian Ocean. The penguins realize that the Indian Ocean is far away from them and that it would not be possible for them to get the seaweed in such a short time. Fred is tearful for his friend Micky, and his tears fell in the water below, which Pincho, an ice fish, feels on his body. He swims up to the penguins and asks them the reason for their sadness.

On hearing their problem, Pincho says, “Wait! If it is the Indian Ocean, I have an idea.” He has friends and family spread across all the great seas of the world and begins to send messages to them. The message is passed on from one fish to another, across the Arctic Ocean and the Pacific Ocean, before finally reaching the butterflyfish in the Indian Ocean. The butterflyfish looks for the golden seaweed, high and low. When he finally finds it, he passes it across till it reaches Pincho. The penguins are overjoyed, and they ask the doctor to prepare the medicine from it. Micky drinks the medicine in one gulp and his original voice returns very fast. The Christmas carol show happened, and the penguins tell everyone how Pincho, the ice

fish helped them in finding the golden seaweed. All the people of Icepack enjoyed the Christmas carols and decided to help each other.

We see from this story how by helping each other, we can bring true happiness in the world. Merry Christmas children!!

## சகோதரிகள் பகுதி

**அன்பு சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.**

**அந்தஷனமே பரம சேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள். (லூக்கா 2:13,14).**

**இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் பிறந்த போது பூமியிலே சமாதானம் உள்டானது. எல்லோருடைய குடும்பங்களிலும் மகிழ்ச்சி சமாதானம் உண்டானது.**
**இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 5:1). நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் ஒரு போதும் தேவனிடத்தில் சமாதானம் பெற முடியாது. ஏனென்றால் யாராலும் முழுமையாக நியாயபிரமாணத்தை கடைபிடிக்க முடியாது அதனால் எப்போதும் தேவனுக்கு முன்பாக ஒரு குற்ற உணர்வு இருக்கும். ஆனால் இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தால் நீதிமான்கள் ஆக்கப்பட்டவர்களுக்குஇந்த குற்ற உணர்வு இருக்காது ஏனென்றால் அவர்கள் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறார்கள். இந்த சமாதானத்தில் எப்போதும் அவர்களால் ஜீவிக்க முடியும்.**

**இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்து நம் பாவங்களை சுமந்ததால் பாவத்தின் மேல் போர் முடிவடைந்தது. தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் சமாதானம் ஏற்ப்பட்டது. தேவனோடு மனுக்கலம் ஒப்புரவாக்கப்பட்டுவிட்டது. தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஒரு**

பகையும் இல்லை. பாவத்தின் மேல் போர் முடிவடைந்துவிட்டது. சமாதானம் ஏற்படுத்தப்பட்டது.

இப்போது யார் வேண்டுமென்றாலும் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளலாம். தேவனோடு ஒப்புரவாக்கப் பட்டவர்களாகலாம். தேவனோடு சமாதானமாகி வாழலாம். இது அன்பு, பாசம், செழிப்பு, ஆரோக்கியம், வல்லமை, இரட்சிப்பு, பாதுகாவல், பரிபூரணம் நிறைந்த "சமாதான வாழ்க்கை" இதுவே நித்திய ஜீவன். இந்த வாழ்க்கையில் தேவன் ஒருபோதும் உங்களோடு கோபப்படுவது இல்லை. நியாயப்பிரமாணத்தை கொண்டு உங்களை தண்டிப்பது இல்லை. சமாதானம், சந்தோஷம், செழுமை நிறைந்த வாழ்க்கை. தேவனோடு அனுதினம் தேவ பயத்தோடு பேசி, ஜெபித்து, விளையாடி காரியங்களை பகிர்ந்து கொண்டு வாழலாம்.

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுபோகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரை தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16). தேவன் நம்மை அளவில்லாமல் சிநேகித்தார். அதனால் தன் ஒரே பேறான குமாரனையே நமக்காக தந்தார் அவரை விசுவாசிக்கிறவர்கள் எவரும் நரகத்துக்கு செல்லாமல் பரலோகத்துக்கு செல்வார்கள். அவரை விசுவாசிக்கிறவர்கள் கெட்டுபோகாமல் இருப்பது மாத்திரம் அல்ல. "நித்திய ஜீவன் அடைவார்கள்".

இயேசு கிறிஸ்து தனது இரத்தத்தினால் வாங்கி தந்த இந்த தேவ சமாதானத்தில் வாழ்ந்து, மற்றவர்களையும் இந்த சமாதானத்துக்குள் வாழ அழைத்து சமாதானத்தின் சுவிசேஷம் சொல்லி வாழ வேண்டியது ஒவ்வொரு விசுவாசியின் கடமை அல்லவா? எல்லா நாட்களிலும், குறிப்பாக இந்த இயேசு கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாடும் நாட்களிலும் இந்த சமாதனத்தோடு வாழ்ந்து இந்த சமாதானத்தின் சுவிசேஷத்தை, சமாதானம் இல்லாமல் இருக்கும் மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுத்து அவர்களையும் இந்த சமாதானத்துக்குள் வழி நடத்தலாமே. தேவன் தாமே ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக கிறிஸ்து பிறப்பின் நல் வாழ்த்துக்கள்.

கர்த்தரின் பணியில்,

**சகோதரி. டெய்ஸி எபிநேசர்**

# ஆதங்கம்! ஆராதனையின் மேல்

என் நேசர் என்னை
விருந்து சாலைக்கு
கூட்டி வந்தார் மகிழ்விக்க!
இன்று எது விருத்து சாலை
என்று புரியாதோர் கூட்டம்
பறக்க ஓடுகின்றன
ஆராதனை வீரரை பார்க்க
குலுங்குகிறாராம் , ஜனத்தை
குலுக்குகிறாராம் ! கூட்டம்
அலை மோதுகிறதாம் – செய்தி
நவ நாகரீகம் – தாளம்
சுப நாகரீகம் என்ன முடிவு என்றால்
உலகத்தை சபை
தன் வசப்படுத்துவதை
காண சகிக்கவில்லை!
கர்த்தாவே சீக்கிரம் வாரும்!
இன்றைய ஆராதனையில்
அலங்காரம் இல்லையாம்
உபவாசம், ஜெபம் என
பழங்கால பக்தி பேசுகிறோமாம்
எல்லாவற்றையும் இயேசு
செய்து முடித்த பின்பு
நாம் ஏன் உபவாசிக்க?
நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?
இயேசுவின் கிருபைக்கு
இல்லையா வல்லமை?
என்கின்றனர் ஆராதனை வீரர்கள்!
கிரியையல்ல – கிருபையால்
இரட்சிக்கபட்டோம்
நான் ஏன் ஜெபித்து
தேவ கிருபையை
மட்டுபடுத்த வேண்டும்
என்கிறார்கள்! அல்லேலூயா!
நான் ஜெயங்கொண்டு – என்
பிதாவின் சிங்காசனத்தில்
அமர்ந்தது போல –எவன்
ஜெயங்கொள்கிறானோ அவனும்
என்னோடே கூட
அமரலாம் என்னுடைய
சிங்காசனத்தில் என்றவர்
ஏன் என்னை ஜெயங்
கொள்ள சொன்னாரோ
தெரியவில்லை –தெரிந்தால்
எனக்கும் சொல்லுங்கள்
நானும் பரலோகம்
வர ஆசையாய் இருக்கிறது
நேரமில்லை நேரமில்லை
அகில உலகமும்கம்பியூட்டர்
வேகத்தில் ஓடுவதை
விவேகமுள்ளவர்கள் சிந்திக்கட்டும்
வீணான ஆராதனை என்று
வேலை மெனக்கெடுவானேன்?
என்போரை என்ன சொல்ல.
ஆலயத்திற்கு போவோம்
என்றவுடன், தாவீதின்
கால்கள் எருசலேம் வாசலில்
அன்று நின்றன – இன்றோ
ஆராதனையின் அர்த்தமே
புரியவில்லை, பலருக்கு
பார்வோன் தடுத்தது
எகிப்திலேதான்
என பண்பாடு 'வோர்
தடுகின்றனர் , –கர்த்தரின்
பட்சத்தில் நிற்கிறவர்கள்
பட்டயம் ஏந்தத்தான் வேண்டும்
விக்கிரகம் செய்வதைத்
தடுத்து , சகோதரன் எனினும்
வெட்டி வீழ்த்தத்தான்
வேண்டும், –இந்த ஜனத்தை
எனக்காக ஏற்படுத்தினேன்
இவர்கள் என் துதியை சொல்லி
வருவர்கள் என்றவர்,
எதிர்பார்கிறார்.
ஆராதிப்போம் !
துதிப்போம்! அல்லேலூயா !
துதி அவருக்கே

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில


















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்

சகோ. ஜெயசேகர்

96646444

செயலாளர்

சகோ. இயேசு ரெத்தினம்

23924262 - 97545812

பொருளாளர்

சகோ. பால் ஜெகநாதன்

66889535 - 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . எப்சிபா ஸ்டீஃபன்

67792009 - 56640551

வாலிப ஐக்கிய தலைவர்

சகோ. பிரசாத் சுந்தரேசன்

60781168

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only